முடிவெடுத்தால் நான் ஏற்றுக்கொள்ளத் தயார். இந்த விதியின் கீழ் இதை ஏற்றுக்கொள்ள வேண்டும், இந்த விதியின் கீழ் அவையை ஒத்திவைக்க வேண்டும் என்று எல்லோரும் சொல்வீர்களானால் அதைப் பற்றி விவாதிக்கலாம். பாயின்ட் ஆப் ஆர்டரே இப்பொழுது எழுப்ப வேண்டாம் என்று சொல்கிறேன். ஆனல், நீங்கள் பாயின்ட் ஆப் இன்பர்மேஷன் என்று சொல்லுகிறீர்கள். தயவுசெய்து உட்காருங்கள்.

(ஆ) உறுப்பினர்கள் கொடுத்துள்ள கேள்விகளுக்குப் பல மாதங்கள் ஆகியும் பதில் வராதது குறித்து.

திரு. மு. அரங்கநாதன் : பேரவைத் தலைவர் அவர்களே, நான் ஏற்கனவே தங்களிடம் இரண்டுமுறை தெரிவித்தேன். தங்கள் அறையிலேயும் தெரிவித்தேன். 11-7-1977 அன்று 3 கேள்விகள் கொடுக்கப்பட்டு 8 மாதங்கள் கடந்து விட்டன ஒரு கேள்விக்கும் பதில் வரவில்லை. கேள்விகளுக்கு இத்தனை நாட்களுக்குள் பதில் வரவேண்டும் என்று விதியிருக்கிறது. அப்படி விதி இருந்தும் இந்த 8 மாதங்களாகப் பதில் அனுப்பாத அதிகாரிகள் மீது தாங்கள் என்ன நடவடிக்கை எடுத்திருக்கிறீர்கள் என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : தயவுசெய்து உறுப்பினர் அவர்களுடைய கருத்தை நான் ஏற்றுக் கொள்கிறேன். ஒரு கேள்விக்கு 42 நாட்களுக்குள் பதில் வரவில்லை என்றால் அதைப் பற்றி எழுப்புவதற்கு உறுப்பினர்களுக்கு உரிமை உண்டு. அது ஏன் வரவில்லை என்று அமைச்சர் அவர்களது கவனத்திற்குக் கொண்டு வருகிறேன். இந்த அவையிலே அமைச்சர் அவர்கள் 42 நாட்களுக்குள் பதில் தெரிவித்துவிட்டால் நல்லது. பல கேள்விகளுக்கு 4, 5 மாதங்கள் ஆகியும் பதில் வரவில்லை. அவைகளைத் துரிதப்படுத்தி சீக்கிரமாகக் கொடுப்பதற்கு நான் ஏற்பாடு செய்திருக்கிறேன்.

(இ) ஒத்திவைக்கப்பட்ட வினுக்கள் மீண்டும் எப்போது எடுத்துக்கொள்ளப்படும் என்பது குறித்து.

திரு. இரெ. இராசமாணிக்கம் : 11—3—1978-ஆம் தேதி அன்று மருத்துவத்துறை சம்பந்தமாகக் கேள்விகள் ஒத்திவைக்கப் பட்டிருக்கின்றன. அதற்குப் பிறகு வந்த கேள்விகளுக்குப் பதில் சொல்லப்பட்டிருக்கின்றது. அந்தக் கேள்விக்களுக்குப் பதில் சொல்லவில்லை. அவைகளுக்கு எப்போது பதில் சொல்லப்படும் என்று தெரிந்துகொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு முதல் அமைச்சர் அவர்களுடைய வேண்டுகோளுக்கிணங்க, அவர்களுக்கு வேறு பிரச்சினைகள் இருக்கிற காரணத்தால் ஒத்தி வைக்கப் பட்டுள்ளன, அந்தக் கேள்விகள் கட்டாயம் வரும். வராமல் போகாது. அமருங்கள். அமருங்கள்.